ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1772/5 - 2012 අගෝස්තු මස 21 වැනි අඟහරුවාදා - 2012.08.21

*1772 /5 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* VIII.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

பிரிவு 20 (4) (அ) வின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், உயர்கல்வி நிறுவனங்களினதும் அவற்றோடிணைந்துள்ள உயர்படிப்பு நிறுவகங்களினதும் இயைபான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தபின்னர், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைநிறுத்தம் காரணமாக இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய உயர்கல்வி நிறுவனங்களினதும் உயர்படிப்பு நிறுவகங்களினதும் பணியும் நிருவாகமும் பாரதூரமான முறையில் நிலைகுலைந்துள்ளதெனத் திருப்திப்பட்டுள்ளதனால், 2012, ஓகத்து 21 ஆந் திகதியிலிருந்து மேலும் அறிவித்தல் கொடுக்கப்படும் வரை அத்தகைய உயர்கல்வி நிறுவனங்களையும் நிறுவகங்களையும் கல்விசார் செயற்பாடுகள் தொடர்பாக இக்கட்டளை மூலம் மூடிவிடுகின்றேன்.*

*திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*உயர்கல்வி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012.08.21.*

**அட்டவணை**

*மருத்துவப் பீடம் தவிர கொழும்புப் பல்கலைக்கழகம்*
*மருத்துவப் பீடம் தவிர பேராதனைப் பல்கலைக்கழகம்*
*மருத்துவப் பீடம் தவிர ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்*
*மருத்துவப் பீடம் தவிர களனிப் பல்கலைக்கழகம்*
*மொறட்டுவைப் பல்கலைக்கழகம்*
*மருத்துவப் பீடம் தவிர யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்*
*மருத்துவப் பீடம் தவிர றுஹுணப் பல்கலைக்கழகம்*
*சுகாதார பராமரிப்பு அறிவியல்கள் பீடம் தவிர இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்*
*மருத்துவ மற்றும் இணைந்த அறிவியல்கள் பீடம் தவிர இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்*
*இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம்*
*இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்*

கட்புல மற்றும் அரங்காட்டுக் கலைகள் பல்கலைக்கழகம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சுதேச மருத்துவ நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகக் கணனிப்படுத்தற் பகுதி
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
மனித வள முன்னேற்ற நிறுவகம் (மவமுநி), கொழும்பு பல்கலைக்கழகம்
தொழினுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
ஸ்ரீபாலி வளாகம்
திருகோணமலை வளாகம்
வவுனியா வளாகம்

*9-53*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.